# தம்பதிகளிடையே வன்முறையை பொறுத்துக் கொள்ள முடியாது!

**யார் சட்டத்தால் பாதுகாக்கப் படுகிறார்?**
ஜோடியில் குற்றவாளிக்கும் பாதிக்கப்பட்டவருக்கும் இடையிலான (மனைவி, பதிவு செய்யப்பட்ட ஜோடி, கூடிவாழ்வு போன்ற) உறவை பொருட் படுத்தாமல் வன்முறையால் பாதிக்கப் பட்டவரை சட்டம் பாதுகாக்கிறது.

**பாதிக்கப் பட்டவருக்கு என்ன உதவி கிடைக்கும்?**
பாதிக்கப்பட்டவர் தனது விவரங்கள் பகிரப் படுவதை ஏற்றுக்கொண்டால், அவர் லாவி (LAVI) மையத்தால் தொடர்பு கொள்ளப்படுவார் (அவசர தகவல் அட்டையைப் பார்க்கவும்). பாதிக்கப்பட்டவர் தனது சொந்த முயற்சியிலும் லாவி மையத்தை தொடர்பு கொள்ளலாம். இலவச ஆலோசனை வழங்கப்படும்.

வன்முறையாளர் வெளியேற்றப்பட்ட பின்னர் பாதிக்கப்பட்டவர் வீட்டிலேயே இருக்கவிரும்பினால், பாதிக்கப்பட்டவர் அவசர உதவிக்கு EMUS ஐ அழைக்க வேண்டும் (அவசர தகவல் அட்டையைப் பார்க்கவும்).

பாதிக்கப்பட்டவர் மல்லேபிரேரி (MalleyPrairie) காப்பு மையத்தையும் தொடர்புகொள்ளலாம். அல்லது தானாகவே பகல் அல்லது இரவு பாராமல் அங்கே செல்லலாம். (அவசர தகவல் அட்டையைப் பார்க்கவும்). வன்முறையாளர் வெளியேற்றப் பட்ட பிறகு, மல்லேபிரேரி மையம், கேன்டனின் அனைத்து பகுதிகளிலும், வீட்டிலேயே கூட, ஆலோசனைகளை வழங்குகிறது.

**வன்முறையாளர் என்ன உதவியைப் பெற முடியும்?**
காவல்துறையினரால் வெளியேற்றப் பட்டால், வெளியேற்றப் பட்ட நபரை அலே தடுப்பு மையம் (CPAle) (அவசர தகவல் அட்டையைப் பார்க்கவும்) குறைந்தபட்சம் ஒரு இலவச கட்டாய சமூக-கல்வி ஆலோசனை வழங்குவதற்காக தொடர்பு கொண்டு அவர் அவரின் நிலைமையையும் மற்றும் சம்பந்தப்பட்ட அனைவரின் மீதான வன்முறையின் பின்விளைவுகளையும் சீர்தூக்கிப் பார்க்க உதவுகிறது.

வெளியேற்றப்பட்ட நபர் EMUS இலிருந்து குறிப்பாக அவசர தங்குமிடத்தைக் கண்டறிய உதவியைப் பெறலாம்.

வன்முறையாளர் இலவச ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல் பெறுவதற்காக தங்கள் சொந்த முயற்சியில் CPAle ஐ தொடர்புகொள்ளலாம். உணர்ச்சிகளை கட்டுப்படுத்தி வன்முறையைக் குறைப்பதற்கான வழிமுறைகளை CPAle வழங்குகிறது.

**யாரை வெளியேற்றமுடியும்?**
காவல்துறையினர் வன்முறையாளரை உடனடியாக வீட்டிலிருந்து வெளியேற்ற முடியும்.

**வெளியேற்றத்தை யார் தீர்மானிக்கிறார்கள்?**
காவல்துறையினர் மேலும் வன்முறையைத் தடுக்க வன்முறையாளரை வெளியேற்றுகிறார்கள். பாதிக்கப்பட்டவர் இந்த நடவடிக்கையை எதிர்க்க முடியாது. இந்த நடவடிக்கை முறையாக நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப் படுகிறது. அது ஒரு உத்தரவை பிறப்பித்து பதினான்கு நாட்களுக்குள் ஒரு அதிகாரப்பூர்வ விசாரணையை ஏற்பாடு செய்கிறது.

வீட்டின் உரிமையாளர் அல்லது குத்தகைதாரர் என்ற உண்மை வெளியேற்றத்தை பாதிக்கிறதா?

இல்லை. இது எந்தப் பாத்திரத்தையும் வகிக்காது. வன்முறையாளர் எவரையும், அவர்கள் வீட்டின் உரிமையாளராக இருந்தாலும், ஒரே குத்தகைதாராக இருந்தாலும் காவல்துறையினர் வெளியேற்ற முடியும்.

**வெளியேற்றப் பட்ட நபர் என்ன எடுத்துச் செல்லமுடியும்?**
அவருக்கு அவசியமான தனிப்பட்ட உடமைகளை அவர் எடுத்துச் செல்லலாம் (எ.கா. அவருடைய தனிப்பட்ட ஆவணங்கள், உடைகள், மருந்துகள், அவருடைய சொந்த மடிக்கணினி போன்றவை).

**வெளியேற்ற காலம் என்ன?**
வெளியேற்றம் அதிகபட்சமாக முப்பது நாட்களுக்கு செல்லும். கோரிக்கையின் பேரில், நீதிமன்றம் வேறு பாதுகாப்பு அல்லது பிரித்துவைத்தல் ஏற்பாடுகளை எடுக்கும். ஒரு புதிய கால வெளியேற்றமும் இதில் அடங்கும்.

**வெளியேற்றப் பட்ட நபர் அமைதியான பிறகு திரும்ப முடியுமா?**
இல்லை, கால அவகாசம் முடியும் வரை முடியாது. வெளியேற்றம் இருதரப்பினருக்கும் நிலைமையைப் பற்றி சிந்திக்கவும், தேவைப்பட்டால் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் அனுமதிக்கிறது.

**வெளியேற்றப் பட்ட நபர் தடைகளை மதிக்கவில்லை என்றால் என்ன செய்வது?**
பாதிக்கப்பட்ட நபர் வெளியேற்றப் பட்டவருக்கு கதவைத் திறக்கக்கூடாது. அவர் உடனடியாக பொலிஸை அழைத்து

…

TAMOUL

# அவசர தகவல் அட்டை

## அவசரம்

**பொலிஸ் - எந்த அவசரநிலைக்கும், 24 மணி நேரமும்**
117 அல்லது 112

**24 மணிநேர மருத்துவ அவசரநிலை**
144

**Equipe mobile d'urgences sociales (EMUS)**
(மொபைல் அவசர சமூக குழு) | 24/24
0848 133 133

## பாதிக்கப்பட்டவருக்கான ஆதரவு

**Centre d'accueil MalleyPrairie** (மல்லேபிரேரி காப்பு மையம்)
24 மணிநேரமும் அடைக்கலம்
Chemin de la Prairie 34 – 1007 Lausanne
021 620 76 76 – info@malleyprairie.ch

**Centre LAVI** | பாதிக்கப்பட்டவருக்கான ஆதரவு
Rue du Grand-Pont 2 bis – 1003 Lausanne – 021 631 03 00
–
Rue de la Plaine 2 – 1400 Yverdon-les-Bains – 021 631 03 08
–
Rue du Molage 36 – 1860 Aigle – 021 631 03 04

## வன்முறையாளருக்கான ஆலோசனைகள்

**Centre Prévention de l'Ale - CPAle** (அலே தடை மையம்)
Rue de l'Ale 30 – 1003 Lausanne
021 321 24 00 – info@prevention-ale.ch

## தங்குமிட அனுமதி

**La Fraternité du CSP** (சி.எஸ்.பி சகோதரத்துவம்)
Place M.-L. Arlaud 2 – 1003 Lausanne
021 213 03 53 – frat@csp-vd.ch

## தங்குமிட அனுமதி

**Service de la population** (மக்கள் துறை)
தங்குமிட அனுமதிக்கான அதிகாரி
Av. de Beaulieu 19 – 1014 Lausanne

## மருத்துவ அறிக்கை - CONSTAT MÉDICAL

**Unité de médecine des violences**
(வன்முறை நிகழ்வுகளுக்கான மருத்துவ அணி)
CHUV – Rue du Bugnon 44 – 1011 Lausanne – 021 314 00 60

**Hôpital d'Yverdon-les-Bains**
Rue d'Entremonts 11 – 1400 Yverdon-les-Bains – 024 424 42 20

**Hôpital Riviera Chablais – Site de Montreux**
Av. de Belmont 25 – 1820 Montreux – 021 966 64 77

**Nyon**
Avenue Reverdil 8 – 1260 Nyon – 021 314 08 51

## வட்டார நீதிமன்றங்கள்:

**Tribunal d'arrondissement de Lausanne**
Palais de justice de Montbenon
Allée E.-Ansermet 2 – 1014 Lausanne

**Tribunal d'arrondissement de la Broye et du Nord vaudois**
Rue des Moulins 8 – Case postale – 1401 Yverdon-les-Bains

**Tribunal d'arrondissement de l'Est vaudois**
Cour-au-Chantre – Rue du Simplon 22 – 1800 Vevey

**Tribunal d'arrondissement de La Côte**
Rue de Saint-Cergue 38 – 1260 Nyon

**www.violencequefaire.ch**
உங்கள் கேள்விகளை அநாமதேயமாகக் கேட்க முடியும் வலைத்தளம்.

**Bureau de l'égalité** (சமத்துவ அலுவலகம்)
021 316 61 24 - info.befh@vd.ch
www.vd.ch/violence-domestique

…

வெளியேற்றம் ஏற்கனவே நடந்திருப்பதைக் கூற வேண்டும். தேவைப்பட்டால், பாதிக்கப்பட்டவர் நீதிமன்றத்தால் அளிக்கப் பட்ட வெளியேற்ற உத்தரவை பொலிசுக்கு காட்டலாம்.

தேவைப்பட்டால், காவல்துறை பலாத்காரத்தை பயன்படுத்தி வெளியேற்றப் பட்டவரை அகற்றும். சில சந்தர்ப்பங்களில், தடையை மீறினால் குற்றவியல் தண்டனைகள் சுமத்தப் படும்.

வெளியேற்றப் பட்ட நபர் தனக்கு (ஆடை, ஆவணங்கள் போன்ற) தேவைகள் இருந்தால், காவல்துறையினரை அழைத்துக் கொண்டு வீட்டிற்குச் செல்ல வேண்டும்.

தொலைதொடர்பு மூலம் துன்புறுத்தப் பட்டால், பாதிக்கப்பட்டவர் பதிலளிக்கக் கூடாது. வன்முறையாளர் தொடர்பு கொள்வதைத் தடைசெய்யவும், தொலைதொடர்பு வசதியை தவறாகப் பயன்படுத்தியதற்காக குற்றவியல் புகார் அளிக்கவும் பாதிக்கப்பட்டவர் நீதிமன்றத்தை நாடலாம்.

**காவல்துறை தனது கூட்டாளரை வெளியேற்றினால் ஒரு வெளிநாட்டவர் தனது குடியிருப்பு அனுமதியை இழக்கிறாரா?**
இல்லை. வெளியேற்றம் ஆபத்தைத் தடுப்பதற்கான குறுகிய காலவழி முறையே. பாதிக்கப்பட்டவரின் குடியிருப்பு அனுமதி வெளியேற்றப்பட்ட நபருடன் இணைக்கப் பட்டிருந்தால், பிரிவு நீண்ட காலமாக இருக்கும் பட்சத்தில், சி.எஸ்.பி. (CSP) சகோதரத்தை (அவசர தகவல் அட்டையைப் பார்க்கவும்) கலந்தாலோசிக்கவும்.

**உங்கள் பாதுகாப்பில்**
**கவனமாக இருங்கள்.**

வன்முறையாளரை வெளியேற்றுவது பாதிக்கப்பட்டவரை வீட்டில் தங்க அனுமதிக்கிறது. இருப்பினும், இது கூடுதல் வன்முறைக்கு எதிராக முழுமையான பாதுகாப்பை வழங்காது.

வன்முறை இருக்கும் ஒரு உறவிலிருந்து விடுபடுவது கடினம், அதற்கு காலம் ஆகும். அத்தகைய கட்டத்தில், கிடைக்கக்கூடிய எந்த உதவியையும் பயன்படுத்துவது அவசியம்.

**ஆபத்தான சூழ்நிலையில்**

**அவசர போலீஸ் அழைப்பு எண்கள்**
**117 அல்லது 112**

design CULLYCULLY.STUDIO - © 2019 - BEFH

canton de vaud

# அடிப்பவர், வெளியேற்றம்!

தம்பதியினரில் வன்முறையில் ஈடுபடுவோருக்கும் மற்றும் பாதிக்கப் பட்ட வருக்குமான தகவல் மற்றும் ஆலோசனை

**Bureau de l'égalité entre les femmes et les hommes**